தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 39/பேரூ/2022

நாள் 09.05.2022

திரு. P. மணிமாறன்,
ஆயக்குடி, திண்டுக்கல் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், பழனிவட்டம், ஆயக்குடி மற்றும் அஞ்சல், குறிஞ்சி நகர், கதவு எண்.12G 31, ராகேஷ்குமார் இல்லம், ஒபுளாபுரம் என்ற முகவரியைச்சேர்ந்த திரு.பி.மணிமாறன் என்பவரின் 27.12.2021 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.12.2021ல் பெறப்பட்டு, 39/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், பழனிவட்டம், ஆயக்குடி மற்றும் அஞ்சல், குறிஞ்சி நகர், கதவு எண்.12G 31, ராகேஷ்குமார் இல்லம், ஒபுளாபுரம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. பி. மணிமாறன் என்பவர் தமது 27.12.2021 நாளிட்ட புகார் மனுவில் தான் மேற்கண்ட முகவரியில் கடந்த 20 ஆண்டுகளாக வசித்து வருவதாகவும், தனது வீட்டை ஒட்டி கிழக்கே பிளாட் எண்.4ல் வீடு கட்டியுள்ள திரு.சிவபிரகாஷ் என்பவர் (1) தனக்குச் சொந்தமான கழிவுநீர் குழாய் மற்றும் வடக்கு காம்ப்பவுண்டுக்கு முன் கிழபுறம் கிழமேல் பொது இடத்தில் சாக்கடை வாய்க்காலை மூடி வடக்குச் சுற்றுச்சுவருக்கு குறுக்கே சிமெண்ட் டேப்பர் மற்றும் இரும்பு கிரில் அமைத்து அவர் (எதிர்மனுதாரர்) வீட்டிற்கு கிழக்கே 15 அடியில் மெயின் கேட் இருந்தும் பின் கதவாக உள்ள தங்கள் காம்பவுண்டுக்கு வடக்குப் பகுதியில் திட்டமிட்டே

தெருச்சாலையை மறித்து நிரந்தர சிமிண்ட் டேப்பர் மற்றும் இரும்பு கிரில்களை அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றும் (2) தனது வீட்டிற்கு (பிளாட் எண்.5) கிழக்கே தென் வடலாக உள்ள சுற்றுச்சுவர் தங்கள் மனையடி இடத்தில் பராமரிப்பு செய்வதற்காக அரைஅடி கிழக்கே விட்டுவிட்டு கட்டப்பட்டுள்ளது என்றும், மேலும் கிழக்குச் சுவற்றிற்கும் தரைதளத்திற்கும் 6 அடி இடம் விட்டு வீடு கட்டப்பட்டுள்ளது என்றும் (3) திரு. சிவபிரகாஷ் தங்கள் சுற்றுச்சுவருக்கு கிழக்கே உள்ள அரை அடி இடத்தினை ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கத்தோடும், சுற்றுச்சுவர் கட்டாமல் தங்கள் சுற்றுச்சுவரை ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு, தங்களை கேட்காமலேயே தனது கிழக்கு சுற்றுச்சுவருடன் இணைத்து செயல்பட்டுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

தனியர் திரு. சிவபிரகாஷ் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பு குறித்து ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலருக்கு தெரிவித்தும், தபால் மூலமாக மனுக்கள் அளித்தும், நேரில் சந்தித்தும் நடவடிக்கை எடுக்க வேண்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், காவல்துறை ஆய்வாளர், ஆயக்குடிக்கு தனியரின் ஆக்கிரமிப்பு குறித்து கொலைமிரட்டிலிலிருந்து உரிய பாதுகாப்பு வழங்கிட வேண்டியும் புகார் மனுக்களை அளித்ததாகவும், பழனி வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து தனது வீட்டு மனையிடத்தில் நான்கு அத்துமால் அளவீடு செய்ய கட்டணம் செலுத்தியும், சர்வேயர் தமது பணியினை செய்வதற்கு வருகைதந்தும் அதனை செய்யவிடாமல் திரு. ஆர். சிவபிரகாஷ் தடுத்து செயல்பட்டுள்ளார் எனவும், தனது மனையிடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்தினை சட்டபூர்வமாக மீட்கவேண்டி முறையான நடவடிக்கைகள் தம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், ஆக்கிரமிப்புகளை அகற்றிட உரிய நடவடிக்கை கோரி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் புகார் மனு அளித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், 12.11.2021 நாளிட்டு ஆயக்குடி பேரூரராட்சி செயல் அலுவலரால் திரு. சிவபிரகாஷ் என்பவருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு நகல் தமக்கும் அளிக்கப்பட்டதென்றும், அதில் ஆயக்குடி பேரூராட்சி துப்புரவு ஆய்வாளரது அறிக்கையில் கழிவுநீர் பாதையை சுத்தம் செய்யும் வகையில் தற்காலிக சிலாப் அமைக்க நேரடியாக அறிவுறுத்தப்பட்டபோதிலும், தற்போதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மனுதாரரான திரு. மணிமாறன் தெரிவித்துள்ளதால், புகார்தாரரின் கழிவுநீர் வாய்க்கால் தூர்வாரும் வண்ணம் போதிய இடவசதி செய்தும், பொது கழிவுநீர் குழாயை சுத்தம் செய்யும் வகையில் சாய்வு தளத்தினை மாற்றிஅமைத்திடுமாறும் அறிவுறுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஆக்கிரமிப்புகளை அகற்றிட எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலையில், ஆக்கிரமிப்புகளை உடனே அகற்றிடவும், தனது கழிவுநீர்க் குழாயை தாமே பராமரிப்பு செய்துகொள்ளும் வண்ணம், நடவடிக்கை எடுத்து உதவிடுமாறு கோரி 24.11.2021ல் தம்மால் மீண்டும் கோரிக்கை மனு ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆயக்குடி செயல் அலுவலர் மற்றும் அவரது அலுவலக ஊழியர்கள் ஐந்து பேர் தனது மனையிடத்திற்கு வருகைதந்து ஆய்வு செய்வது போல் வந்து தனது வீட்டின் வரைபடம் மற்றும் மனை அங்கீகாரம் ஆகியவற்றை கவனத்தில் கொள்ளாமலும், முறையாக அளவீடு செய்யாமலும் செயல்பட்டதுடன், ஆக்கிரமிப்புகளை அகற்றிடக் கோரி அளித்த மனுவினை

தவறாக எடுத்துக்கொண்டும், ஆக்கிரமிப்பாளர்களுக்கு சாதகமாக செயல்பட்டு, தம்மை பழிவாங்கும் கெட்ட உள்நோக்கத்துடன் 3.12.2021 நாளிட்ட அறிவிப்பு மூலம் தனது காம்பவுண்டு சுவரை அப்புறப்படுத்துமாறும், தனது மனையிடத்திற்குள் முறையாக அனுமதி பெற்று தரைதளம் கட்டப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகியுள்ள நிலையிலும், முதல் தளம் பேரூராட்சியின் அனுமதிபெற்று கட்டி 1 1/2 ஆண்டுகளுக்குமேல் ஆகியுள்ள நிலையிலும், தமக்கு அச்சுறுத்தல் ஏற்படும்வண்ணம் பொய்யான குறைகளைத் தெரிவித்து தமக்கு அறிவிப்புக் கடிதத்தினை அனுப்பியுள்ளார் என்று தெரிவித்துள்ளார். தனது வீட்டின் தரைதளம் மற்றும் முதல் தளம் அனைத்தும் முறையாக விதிகளின்படி உரிய கட்டணத்தைச் செலுத்தி வங்கியில் கடன் பெற்று கட்டியுள்ளதால், தனது வீட்டின் வடக்கு காம்ப்பவுண்ட்க்கு குறுக்கே தாம் 20 ஆண்டுகளாக அனுபவித்து வந்த கழிவுநீர் வெளியேற்ற குழாயை நிரந்தரமாக சிமிண்ட் டேப்பரால் மூடியுள்ளதை அகற்றிடவேண்டியும், தனது வடக்கு காம்ப்பவுண்டுக்கு வடக்கே தனது சுற்றுச்சுவற்றை பராமரிக்க விடாமல் தடுத்து போடப்பட்டுள்ள இரும்பு கிரில் மற்றும் மழைநீர் வாய்க்காலை அடைத்துள்ளதை அகற்றிடவேண்டியும், தமக்கு பாதகமாக செயல்பட்டு வரும் ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கையினை தடுத்திடுமாறும், தனது மனையிடத்தை மாவட்ட சர்வே அதிகாரிகள் அளவீடுசெய்திடவும், ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலரின் 3.12.2021 நாளிட்ட அறிவிப்புக் கடிதத்தினை இரத்துசெய்து உத்தரவிடுமாறும் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

மனுதாரர் தனது புகார் மனுவுடன் தனது வீட்டு மனைக்கான சுத்தக் கிரைய பத்திரம் உட்பட அனைத்து ஆதாரங்களையும் சமர்ப்பித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான நேரடி விசாரணையை 27.4.2022 அன்று எடுத்துக்கொள்ளலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவுசெய்ததன் அடிப்படையில், ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் மனுதாரர் ஆகியோருக்கு 20.4.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன.

3. 27.4.2022 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரர் மற்றும் ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

4. மனுதாரர் திரு. பி. மணிமாறன் அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் “ஆயக்குடி பேரூராட்சிக்குட்பட்ட எனது வீட்டிற்கு கிழக்குப் பக்கத்தில் திரு. சிவபிரகாஷ் என்பவர் புதிதாக வீடு கட்டியுள்ளார். எனது வீட்டின் முன்புறத்தில் சாக்கடை வாய்க்கால் செல்கிறது. அதில் கொசுத் தொல்லை போன்ற சுகாதார கேடுகள் ஏற்பட்டதால், மேற்படி சாக்கடையை தற்காலிகமாக சிமெண்ட் சிலாப் கொண்டு மூடி எங்களால் பராமரிக்கப்பட்டு வந்தது. மேற்கண்ட கழிவுநீர் குழாயை பராமரிக்க இயலாதவாறு எனது பக்கத்துவீட்டுக்காரரான திரு. சிவபிரகாஷ் என்பவர் தெரு சாலையை ஆக்கிரமித்து சிமெண்ட் டேப்பர் (Ramp) மற்றும் கிரில் அமைத்துள்ளார். இதனால் கழிவுநீர் குழாயை முறையாக பராமரிக்க இயலவில்லை. எனவே, கழிவுநீர் செல்வதற்கு தடையாக திரு. சிவபிரகாஷ் என்பவர் அமைத்துள்ள சிமெண்ட் டேப்பர் மற்றும் கிரில் ஆகியவற்றை அகற்றிட உரிய நடவடிக்கை

எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது 27.4.2022 நாளிட்ட கடிதத்தினையே எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்நிகழ்வு தொடர்பான புகைப்படங்களையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. க. மகேந்திரன் அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "திண்டுக்கல் மாவட்டம், ஆயக்குடி பேரூராட்சி ஒபுளாபுரத்தில் பிளாட் எண்.5ல் திரு. மணிமாறன் என்பவரும், பிளாட் எண்.4ல் திரு. சிவபிரகாஷ் என்பவரும் வசித்து வருகின்றனர். இவர்கள் இருவரும் கழிவுநீர் செல்லும் கால்வாயை மூடி சாலையிலுள்ள இடத்தை ஆக்கிரமித்து அவர்களின் வீட்டிற்குள் செல்லும்பொருட்டு ramp அமைத்துள்ளனர். பேரூராட்சியின் இடத்தை ஆக்கிரமித்து Ramp அமைத்துள்ளதைத் தொடர்ந்து மேற்கண்ட இருவருக்கும் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இன்னும் மேல்நடவடிக்கை பேரூராட்சியால் எடுக்கப்படவில்லை என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நிகழ்வு தொடர்பான புகைப்பட நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும், எனது 25.4.2022 நாளிட்ட கடிதத்தினையை எனது மேல்வாக்குமூலமாக பதிவுசெய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

6. ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 25.4.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் திண்டுக்கல் மாவட்டடம, ஆயக்குடி பேரூராட்சிக்குட்பட்ட ஒபுளாபுரம் 14வது வார்டு, குறிஞ்சி நகர் விரிவாக்கப்பகுதியில் மேற்கு ஆயக்குடி கிராம சர்வே எண்.123/A4 ல் பிளாட் எண்.5ல் உள்ள காலிமனையிடத்தில் புதிதாக தரைதளம் மற்றும் முதல் தளம் கொண்ட குடியிருப்பு கட்டடம் கட்ட மனுதாரர் அனுமதி கோரியதன்பேரில், கட்டட அனுமதி எண்.3/2002–2003 நாள் 6.6.2002ல் தரை தளத்திற்கும், கட்டட அனுமதி எண்.44/2019–20 நநள் 31.12.2019ல் முதல் தளத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டது. மனுதாரரின் வீட்டின் அருகாமையில் பிளாட் எண்.4ல் உள்ள காலிமனையிடத்தில் திரு. ஆர். சிவபிரகாஷ், த/பெ ராமசாமி என்பவருக்குச் சொந்தமான காலிமனையிடத்தில் புதிதாக குடியிருப்பு கட்டடம் கட்ட அனுமதி கோரியதன் அடிப்படையில், கட்டட அனுமதி எண்.46/2020–21 நாள் 24.12.2020ல் தரைதளம் கொண்டு குடியிருப்பு கட்டடம் கட்ட வரைபட அனுமதி வழங்கப்பட்டது.

7. மனுதாரருக்கு பேரூராட்சியிலிருந்து வரைபட அனுமதி வழங்கப்பட்டபொழுது புதிதாக கட்டப்படவுள்ள கட்டடத்தைச் சுற்றிலும் 1.5 மீட்டர் அகல இடைவெளிவிட்டு கட்டடம் கட்டப்படவேண்டுமென அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், அளிக்கப்பட்டுள்ள வரைபட அனுமதி நிபந்தனைகளுக்கு மாறாக வீட்டின் முன்புறம் இடைவெளி எதுவும் விடாமல் முற்றிலுமாக காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளதாகவும், பேரூராட்சியால் அனுமதி வழங்கப்பட்ட அளவைக் காட்டிலும் கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ளதாக பேரூராட்சி கடிதம் ந.க.எண்.335/2021/ஆ நாள் 12.11.2021ல் அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும் தனது வீட்டின் முன்புறம் கட்டியுள்ள காம்பவுண்ட் சுவர் நீளத்திற்கு அன்னாரின் வீட்டினுள் செல்வதற்கு ஏதுவாக நுழைவு வாயிலில் பேரூரராட்சியின் வடிகால் மீது சிமெண்ட் சிலாப் போட்டு மூடி பேரூராட்சி பணியாளர்களால் சாக்கடை அடைப்புகளை எடுக்கமுடியாத

வகையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். ஆனால் திரு. மணிமாறன் தனது வீட்டின் கிழக்குப்பக்கம் உள்ள நபரால் தனது வீட்டிலிருந்து வரும் கழிவுநீர் செல்ல முடியாத வகையில் பேரூராட்சிக்குச் சொந்தமான வடிகாலை அடைத்து ஆக்கிரமிப்பு செய்து சாய்தளம் அமைத்துள்ளார் என அடிக்கடி புகார் அளித்ததன் காரணமாக, திரு. சிவப்பிரகாஷ்க்கு பேரூராட்சியின் பொது வடிகாலிலிருந்து வரும் கழிவுநீரும், மனுதாரரின் கழிவுநீர் வாய்க்காலில் தூர்வாறும் வண்ணம் போதிய இடைவெளிவிட்டும், சாய்வுதளத்தை மாற்றியமைத்திடுமாறு பேரூராட்சி கடிதம் ந.க.எண்.335/2021/ஆ நாள் 12.11.2021ல் அறிவிப்பு கொடுக்கப்பட்டதை ஏற்று, கழிவுநீர் செல்ல ஏதுவாக போதிய இடைவெளிவிட்டு சாய்வுதளத்தினை மாற்றியமைத்துள்ளார். மேலும் திரு. சிவபிரகாஷ் தனது வீட்டின் வடக்குப் பக்கம் மற்றும் அருகாமையில் வசிக்கும் நபர்களின் வீடுகளிலிருந்து வரும் கழிவுநீர் செல்வதற்கு இடவசதி ஏதும் இல்லாத காரணத்தினால் தனது இடத்திலிருந்து 3 அடி அகலத்திற்கு பேரூராட்சியின் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வடிகால் கட்டுவதற்கான இடத்தினை தானமாக ஒப்படை செய்துள்ளார். திரு. சிவபிரகாஷ் என்பவருக்கு மனைப்பிரிவு அங்கீகாரம் அளித்துள்ள சாலை வழியாகத்தான் செல்ல வழிவகையுள்ளது. வேறு பாதைகள் எதுவும் கிடையாது. அதனால், தனது வீட்டினுள் செல்ல 3 அடி அகல பாதை வழியாகத்தான் செல்லவேண்டியிருப்பதால், பேரூராட்சிக்குச் சொந்தமான வடிகால்களிலிருந்து வரும் கழிவுநீர் செல்ல அடைப்பு ஏதும் ஏற்படாமலும், மனுதாரரின் வீட்டு கழிவுநீர் வாய்க்கால் தூர்வாறும் வண்ணம் இடையூறு இல்லாமலும், இடைவெளிவிட்டு பேரூராட்சியால் கட்டப்பட்டுள்ள வடிகாலில் தனது சிறு குழந்தைகள் விழாத வண்ணம் சாய்வு தளம் அமைத்துள்ளாரென்றும், கைப்பிடியை தனது சுவற்றிலேயே அமைத்துள்ளார் என்றும் மனுதாரரின் வீட்டுச் சுவருக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாவண்ணம் இடைவெளிவிட்டு இரும்பு கிரில் அமைத்துள்ளார் என்றும் ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

8. பிளாட் எண்.4ல் உள்ள நபரால் பேரூராட்சியின் பொதுப் பாதை எதுவும் ஆக்கிரமிப்போ, பேரூராட்சியின் வடிகால் மீது அமைத்துள்ள சாய்வு தளத்தின் காரணமாக கழிவுநீர் வாய்க்காலில் எவ்வித ஆக்கிரமிப்போ, இடையூறோ எதுவும் இல்லை என்றும், கழிவுநீர் வடிகால் மீது இரண்டு நபர்களும் சிமெண்ட் சிலாப் போட்டுள்ளதற்கான புகைப்படங்களையும் தனது அறிக்கையுடன் ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

9. ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் தமது விளக்க அறிக்கையுடன் இதுசம்மந்தமான ஆதார ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளார். 12.11.2021 அன்று திரு. மணிமாறன் மற்றும் திரு. சிவபிரகாஷ் ஆகியோருக்கு வழங்கப்பட்ட அறிவிப்பு நகல், 03.12.2021ல் திரு. மணிமாறனுக்கு தமிழ்நாடு நகராட்சிகள் கட்டட விதிமுறைகளுக்கு மாறாகவும், வரைபட அனுமதியைவிட கூடுதலாக ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கட்டிடத்தை அகற்றிடக்கோரி வழங்கப்பட்ட 03.12.2021 நாளிட்ட அறிவிப்பு, வழக்கறிஞர்கள் மூலம் திரு. மணிமாறனுக்கு அனுப்பிய 22.11.2021 நாளிட்ட நோட்டீஸ் நகல் (பேரூராட்சி செயல் அலுவலருக்கு நகலிடப்பட்டது), திரு. மணிமாறன் மற்றும் திரு. சிவப்பிரகாஷ் ஆகியோருக்கு ஆயக்குடி பேரூராட்சியால் அனுமதி அளித்து வழங்கப்பட்ட கட்டட வரைபட அனுமதி நகல்கள், புகைப்படங்கள், பேரூராட்சிக்குச் சொந்தமான பொது வடிகாலின் மீது

சிமெண்ட் சிலாப் போடப்பட்டுள்ளதன் நிலைகுறித்த புகைப்படங்கள், இரு நபர்களாலும் பேரூராட்சியின் வடிகாலின்மீது சாய்வு தளம் மற்றும் சிமெண்ட் சிலாப் கொண்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதி குறித்த புகைப்படங்கள், திரு. சிவபிரகாஷ் என்பவரது வீட்டின் முன் அமைக்கப்பட்டுள்ள இரும்பு கிரில் குறித்த புகைப்படம் ஆகியவற்றை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

10. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள், மனுதாரரது வாக்குமூலம், ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விளக்க அறிக்கை மற்றும் ஆவணங்கள், பேரூராட்சியால் மனுதாரர் மற்றும் அவரால் குற்றம் சாட்டப்பட்டு எதிர்மனுதாரராக சுட்டிக்காட்டப்பட்டுள்ள திரு. சிவபிரகாஷ் ஆகிய இருவருக்கும் கட்டட அனுமதி அளிக்கப்பட்ட செயல்முறை ஆணைகளின் நகல், கட்டட வரைபட அனுமதி நகல்கள், மேற்கண்ட இருவருக்கும் பேரூராட்சியினால் அளிக்கப்பட்ட அறிவிப்பு நகல்கள், புகைப்படங்கள் மற்றும் செயல் அலுவலரது வாக்குமூலம் மற்றும் இதர ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- ❖ மனுதாரரால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்பட்டுள்ள 27.12.2021 நாளிட்ட புகார் மனுவில் எதிர்மனுதாரராக திரு. ஆர். சிவபிரகாஷ், பிளாட் எண்.4 குறிஞ்சி நகர், ஒபுளாபுரம், ஆயக்குடி அஞ்சல், பழனி வட்டம் என்பவரை குறிப்பிட்டுள்ளார். மேலும் தனது புகார் மனுவில், தன் வீட்டின் வடக்கு காம்பவுண்ட்க்கு குறுக்கே 20 ஆண்டுகளாக அனுபவித்து வந்த கழிவுநீர் வெளியேற்றுக் குழாயை திரு. சிவபிரகாஷ் நிரந்தரமாக சிமிண்ட் டேப்பரால் மூடியுள்ளதை அகற்றிடவும், தனது வடக்கு காம்ப்பவுண்டுக்கு வடக்கே தனது சுற்றுச்சுவற்றை பராமரிக்க விடாமல் தடுத்து மேற்படி நபரால் போடப்பட்டுள்ள இரும்பு கிரில் மற்றும் மழைநீர் வாய்க்காலை அடைத்துள்ளதை அகற்றிட உத்தரவிடுமாறும், உண்மைக்குப் புறம்பாக ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலரால் தமக்கு வழங்கப்பட்டுள்ள 3.12.2021 நாளிட்ட அறிவிப்பினை இரத்து செய்திடவும், பொது கழிவுநீர் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் பேரூராட்சி செயல் அலுவலருக்கு உத்தரவிடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.
- ❖ ஆயக்குடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் மேற்படி நபர்களால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு முன்பு அமைந்துள்ள பேரூராட்சிக்குச் சொந்தமான வடிகாலை அடைத்து ஆக்கிரமிப்பு செய்து, சாய்வுதளம் அமைத்துள்ளனர் என்பது தெளிவாகிறது.
- ❖ மனுதாரர் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையின்போது அளித்துள்ள வாக்குமூலத்தில் கொசுத் தொல்லை மற்றும் சுகாதார கேடுகள் ஏற்பட்டதால், கழிவுநீர் கால்வாயில் தற்காலிக சிமெண்ட் சிலாப் கொண்டு மூடி தம்மால் பராமரிக்கப்பட்டு வந்தது என்றும், தனது வீட்டு கழிவுநீர் குழாயை பராமரிக்க இயலாதவாறு திரு. சிவபிரகாஷ் என்பவர் சாலையை ஆக்கிரமித்து சிமெண்ட் டேப்பர் (Ramp) மற்றும் கிரில் அமைத்து கழிவுநீர் குழாயை முறையாக பராமரிக்க

இயலாமல் தடை ஏற்படுத்தியுள்ளார் என்றும், அவற்றை அகற்றிட உத்தரவிடுமாறு வேண்டியுள்ளார்

- ❖ ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள வாக்குமூலத்தில், மனுதாரர் மற்றும் அவரால் எதிர்மனுதாரராக குறிப்பிடப்பட்டுள்ள திரு. சிவபிரகாஷ் ஆகிய இருவருமே பேரூராட்சியின் கழிவுநீர் செல்லும் கால்வாயை மூடி சாலையிலுள்ள இடத்தினை ஆக்கிரமித்து, அவர்கள் வீட்டிற்குச் செல்ல Ramp அமைத்துள்ளனர் என்றும் பேரூராட்சியின் இடத்தினை ஆக்கிரமித்து Ramp அமைத்துள்ளதைத் தொடர்ந்து மேற்கண்ட இருவருக்குமே அறிவிப்பு வழங்கப்பட்டதென்றும், இது தொடர்பாக, இன்னும் பேரூராட்சியினால் தொடர் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அறியப்படுகிறது.
- ❖ ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விளக்க அறிக்கையில் திரு. சிவபிரகாஷ் என்பவர் தனது வீட்டின் வடக்குப் பக்கம் மற்றும் அருகாமையில் வசிக்கும் நபர்களின் வீடுகளிலிருந்து வரும் கழிவுநீர் செல்வதற்கு இடவசதி எதுவும் இல்லாத காரணத்தினால் தனது இடத்திலிருந்து 3 அடி அகலத்திற்கு பேரூராட்சியின் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வடிகால் கட்டுவதற்கென இடத்தினை தானமாக ஒப்படைப்பு செய்துள்ளார். திரு. ரா. சிவபிரகாஷ் என்பவருக்கு மனைப்பிரிவு அங்கீகாரம் அளித்துள்ள சாலை வழியாகத்தான் செல்ல வழிவகையுள்ளது என்று, வேறு பாதைகள் எதுவும் கிடையாது. அதனால் தனது வீட்டிற்குள் செல்ல 3 அடி அகல பாதை வழியாகத்தான் செல்ல வேண்டியிருப்பதால் பேரூராட்சிக்குச் சொந்தமான வடிகால்களிலிருந்து வரும் கழிவுநீர் வாய்க்கால் தூர்வாறும் வண்ணம் இடையூறு இல்லாமலும், இடைவெளி விட்டு, வடிகாலில் சிறு குழந்தைகள் விழுந்திடாவண்ணம் சாய்வுதளம் அமைத்து, அருகே பிடித்துச் சென்றிட இரும்பினாலான கைப்பிடியை தனது சுவற்றிலேயே அமைத்துள்ளார் என்றும், இதனால் மனுதாரரின் வீட்டுச் சுவருக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாமல், இடைவெளி விட்டு இரும்பு கிரில் அமைத்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
- ❖ மனுதாரர் தனது புகார் மனுவில் திரு. சிவபிரகாஷ் என்பவரது வீட்டிற்கு கிழக்கே 15 அடியில் மெயின் கேட் இருந்தும், தனியருக்கு பின் கதவாக உள்ள தனது சுற்றுச்சுவரின் வடக்குப் பகுதியில் வடக்கு சுற்றுச்சுவற்றினை பராமரிக்க விடாமல் தடுக்கும் நோக்கத்தோடு தெருச்சாலையை மறித்து நிரந்தர சிமிண்ட் டேப்பர் மற்றும் இருப்பு கிரில்களை அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.
- ❖ திரு. சிவபிரகாஷ் அமைத்துள்ள கிரில் அருகில் மனுதாரரது கழிவுநீர் பைப் பேரூராட்சி கழிவுநீர் கால்வாயில் விழுமாறு ஒட்டி அமைந்துள்ளது தெரியவருகிறது

11. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், மனுதாரர் திரு. பி மணிமாறன் என்பவரால் அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்கள் குறித்து ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலர் தல ஆய்வு மேற்கொண்டு, இரண்டு தரப்பினராலும் எழுத்துபூர்வமாக அளிக்கப்படும் விளக்கத்தினைப் பெற்று, ஆயக்குடி பேரூராட்சிக்குச் சொந்தமான கழிவுநீர் கால்வாயை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதாகவும், தனி நபரின் சுற்றுச்சுவற்றினை பராமரிக்க இடமின்றியும், மனுதாரரது கழிவுநீர் குழாயினை ஒட்டி

திரு. சிவபிரகாஷ் Ramp மற்றும் கிரில் அமைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில், ஆயக்குடி பேரூராட்சிக்குச் சொந்தமான பொது கழிவுநீர் கால்வாயை ஆக்கிரமித்து Ramp மற்றும் கிரில் அமைத்துள்ள திரு. சிவப்பிரகாஷ் மற்றும் திரு. மணிமாறன் ஆகியோருக்கு அறிவிப்பு வழங்கி உரிய மேல்நடவடிக்கையைத் தொடருமாறு ஆயக்குடி பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் தனியார் இரண்டு நபர்களுக்குரிய இடப்பிரச்சனையை நீதிமன்றத்தின் மூலம்தான் தீர்த்துக்கொள்ளவேண்டுமென இந்நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

2022ஆம் ஆண்டு, மே திங்கள் 9–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/ x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. பி. மணிமாறன்,
கதவு எண்.12G 31, ராகேஷ்குமார் இல்லம், குறிஞ்சி நகர், ஒபுளாபுரம்,,
ஆயக்குடி மற்றும் அஞ்சல், பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்–624 613

செயல் அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி, ஆயக்குடி, திண்டுக்கல் மாவட்டம்–624 613

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல்

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

11.5.22
செயலர்
11.5.2022